V12Com

விருதுநகர் மாவட்டப் பொதுத் தேர்வுகள்
இரண்டாம் திருப்புதல் தேர்வு - பிப்ரவரி 2023

வகுப்பு 12

நேரம்: 3.00 மணி | வணிகவியல் | மொத்த மதிப்பெண்கள்: 90

பகுதி - அ

**அனைத்து வினாக்களுக்கும் விடையளி:** 20×1=20

1) மேலாண்மை என்பது ஒரு ..............
அ) கலை ஆ) அறிவியல்
இ) கலை மற்றும் அறிவியல் ஈ) கலை அல்லது அறிவியல்

2) குறியிலக்கு மேலாண்மையானது .............. என்பவரால் அமெரிக்காவில் பிரபலப்படுத்தப்பட்டது.
அ) பேராசிரியர் ரெட்டின் ஆ) ஜார்ஜ் ஒடியோர்ன்
இ) ஹென்றி பயோல் ஈ) எப்.டபிள்யூ டெய்லர்

3) உடனடிச் சந்தை என்பது நிதிக் கருவிகளை விநியோகம் செய்வதும் மற்றும் ரொக்கம் செலுத்துவதும் .............. நடைபெறும் ஒரு சந்தை ஆகும்.
அ) உடனடியாக ஆ) எதிர்காலத்தில் இ) நிலையானது ஈ) ஒரு மாதத்திற்கு பின்னர்

4) பங்குகளை இந்தியா முழுவதும் மின்னணு மூலம் வியாபாரம் செய்யும் நோக்கத்தோடு முதன்மை நிதி நிறுவனங்களால் உருவாக்கப்பட்டதே .............. ஆகும்.
அ) இந்திய உடனடி பங்கு மாற்றகம் ஆ) ஏட்டுக்கடன்
இ) பரஸ்பர நிதி ஈ) துணிகர முதல்

5) நாட்டில் .............. பங்குச் சந்தைகள் உள்ளன.
அ) 21 ஆ) 24 இ) 20 ஈ) 25

6) செபியின் தலைமையகம் .............. ஆகும்.
அ) கல்கத்தா ஆ) மும்பை இ) சென்னை ஈ) தில்லி

7) முதலில் வேலை, அடுத்தது மனிதர் என்பது ஒரு .............. கோட்பாடு,
அ) சோதனை ஆ) நேர்காணல் இ) பயிற்சி ஈ) பணியமர்த்தல்

8) .............. ஊழியர்களின் திறமை குறைபாடுகளைத் தடுக்க உதவுகிறது.
அ) பயிற்சி ஆ) வேலை பகுப்பாய்வு இ) தேர்வு ஈ) ஆட்சேர்ப்பு

9) பண்டங்கள் மற்றும் பணிகளை பணத்தின் அடிப்படையில் மாற்றம் செய்பவர் எவ்வாறு அழைக்கப்படுகிறார்.
அ) விற்பனையாளர் ஆ) சந்தையிடுகையாளர் இ) வாடிக்கையாளர் ஈ) மேலாளர்

10) இணையத்திற்கு நுழைவு வாயில் என்பது
அ) போர்டல் ஆ) சிபியு இ) மோடம் ஈ) வெப்நராங்

11) நுகர்வோர் இயக்கத்தின் தந்தை யார்?
அ) மகாத்மா காந்தி ஆ) ஜான் எப்.கென்னடி
இ) ரால்ப் நேடர் ஈ) ஜவஹர்லால் நேரு

12) ஜான் எப். கென்னடி அவர்களின் கூற்றுப்படி பின்வருபவற்றில் நுகர்வோர் உரிமையில் இடம்பெறாதவை எது?
அ) பாதுகாப்பு உரிமை ஆ) தேர்ந்தெடுக்கும் உரிமை
இ) நுகரும் உரிமை ஈ) தெரிவிக்கும் உரிமை

13) ஜி.எஸ்.டி. என்பது .............., ..............
அ) சரக்கு மற்றும் சமூகவரி ஆ) சரக்கு மற்றும் சேவை வரி
இ) சரக்கு மற்றும் விற்பனை வரி ஈ) சரக்கு மற்றும் ஊதிய வரி

14) பொதுத்துறைக்கு ஒதுக்கப்பட்ட தொழில்களை தனியார் துறைகள் துவங்க அனுமதிப்பது .............. ஆகும்.
அ) தாராளமயமாக்கல் ஆ) தனியார்மயமாக்கல்
இ) உலகமயமாக்கல் ஈ) பொதுநிறுவனம்

15) பொருளின் மீதான உரிமை என்பது
அ) பொருளின் உடைமை ஆ) பொருளைப் பாதுகாத்தல்
இ) பொருளின் மீதான உரிமை பாத்தியம் வைத்திருப்பவர்
ஈ) இவற்றில் ஏதுமில்லை

16) எத்தனை மாதங்களுக்கு பின் காசோலை காலாவதியாகிறது?
அ) 3 மாதங்கள் ஆ) 5 மாதங்கள் இ) 4 மாதங்கள் ஈ) 1 மாதம்

17) கீழ் குறிப்பிடப்பட்டுள்ள எந்தெந்த பண்புகள் தொழில் முனைவோர்க்கு உரித்தானவை?
அ) துணிகர உணர்வு ஆ) நெளிவு சுளிவு இ) தன்னம்பிக்கை ஈ) அனைத்தும்

18) கூட்டுப்பங்கு தொழில் முனைவோரின் வேறுபெயர்
அ) அகத்தொழில் முனைவோர் ஆ) தோற்றுவிப்பாளர் இ) மேலாளர் ஈ) பங்குநர்

19) முந்தைய பங்குதாரர்களுக்கு எந்தவித கட்டணமும் இல்லாமல் வெளியிடும் பங்குகள் ..............

அ) ஊக்கப் பங்குகள் ஆ) சாதாரணப் பங்குகள்
இ) உரிமைப் பங்குகள் ஈ) முன்னுரிமைப் பங்குகள்

20) ஒரு தனியார் நிறுமம் குறைந்தது .............. இயக்குநர்கள் இருக்க வேண்டும்.

அ) ஏழு ஆ) ஐந்து இ) மூன்று ஈ) இரண்டு

## பகுதி - ஆ

**ஏதேனும் ஏழு வினாக்களுக்கு விடையளி.** **7×2=14**
**வினா எண் 30-க்கு கட்டாயமாக விடையளிக்க வேண்டும்.**

21) மேலாண்மைக் கருவிகளைப் பட்டியலிடுக.
22) OTCEI - சிறுகுறிப்பு வரைக.
23) பங்குச்சந்தை என்றால் என்ன?
24) நேர்காணல் என்றால் என்ன?
25) சந்தையிடுதல் என்றால் என்ன?
26) புதிய பொருளாதாரக் கொள்கைகளின் கிளைகள் எழுதுக.
27) மாற்றுமுறை ஆவணம் என்றால் என்ன?
28) வேளாண் தொழில் முனைவோர் என்பவர் யார்?
29) ''பகராள்'' சிறுகுறிப்பு வரைக.
30) பொருட்கள் அல்லது சேவைகளின் மதிப்பு மற்றும் இழப்பீட்டுத் தொகை ரூ. 20 இலட்சத்திற்கு மிகையாக ஆனால் ரூ. 1 கோடிக்கு மிகாமல் இருந்தால் எந்த நுகர்வோர் ஆணையத்திடம் புகார் தெரிவிக்கலாம்?

## பகுதி - இ

**ஏதேனும் ஏழு வினாக்களுக்கு விடையளி.** **7×3=21**
**வினா எண் 40-க்கு கட்டாயமாக விடையளிக்கவும்.**

31) மேலாண்மையை நிர்வாகத்திலிருந்து வேறுபடுத்துக. (ஏதேனும் 3)
32) வணிக இரசீதின் வகைகளை விவரி. (ஏதேனும் 3)
33) காளை மற்றும் கரடி - விளக்குக.
34) பணிவழி பயிற்சி பற்றி நீ அறிவது யாது?
35) சந்தையில் என்னென்ன பொருட்களை சந்தையிட முடியும் என்பதை தெரிவிக்கவும். (ஏதேனும் 3)
36) செயற்கைப் பற்றாக்குறை என்றால் என்ன?
37) வியாபாரத்தின் ஏதேனும் மூன்று உட்புறச்சூழல் காரணிகளை விளக்கு.
38) மாற்றுச்சீட்டின் சிறப்பு இயல்புகளை கூறுக. (ஏதேனும் 3)
39) காலம் கடத்தும் பழமைவாத தொழில்முனைவோர் பற்றி சுருக்கமாக எழுதுக.
40) சட்டமுறைக் கூட்டம் என்றால் என்ன?

## பகுதி - ஈ

**அனைத்து வினாக்களுக்கும் விடையளி:** **7×5=35**

41) அ) மேலாண்மையின் பல்வேறு பணிகளை விளக்குக. (ஏதேனும் 5) **(அல்லது)**
ஆ) அரசுப் பத்திரங்களின் இயல்புகளை விவரி. (ஏதேனும் 5)

42) அ) முதல் நிலைச் சந்தை மற்றும் இரண்டாம் நிலைச் சந்தைக்கும் இடையேயான வேறுபாடுகளை விளக்குக. (ஏதேனும் 5) **(அல்லது)**
ஆ) ஆட்சேர்ப்பு முறைக்கும் தேர்ந்தெடுத்தலுக்கும் இடையே உள்ள வேறுபாடுகளை விவரி. (ஏதேனும் 5)

43) அ) செபியின் பணிகளை விவரி. (ஏதேனும் 5) **(அல்லது)**
ஆ) ஆட்சேர்ப்பு முறையில் உள்ள சமீபகால போக்குகளை விளக்குக.

44) அ) சந்தையிடுகை கலவையின் கூறுகளை குறிப்பிடுக. **(அல்லது)**
ஆ) நவீன சந்தையிடுதலில் ஏதேனும் இரண்டு முறைகளை விளக்குக.

45) அ) நுகர்வோர் எவ்வாறு சுரண்டப்படுகிறார்கள்? (ஏதேனும் 5) **(அல்லது)**
ஆ) எல்பிஜி (LPG)யின் சிறப்பு அம்சங்கள் விளக்குக. (ஏதேனும் 5)

46) அ) விற்பனை ஒப்பந்தத்தின் அடிப்படை கூறுகளைக் கூறி விளக்குக. **(அல்லது)**
ஆ) மகளிர் தொழில் முனைவோர் சந்திக்கும் பிரச்சனைகளை விவரி. (ஏதேனும் 5)

47) அ) ஏதேனும் ஐந்து அரசின் தொழில் முனைவோர் மேம்பாட்டு திட்டத்தினை விளக்குக. **(அல்லது)**
ஆ) பங்குகளுக்கும், கடனீட்டுப் பத்திரத்திற்கும் உள்ள வேறுபாடுகள் யாவை? (ஏதேனும் 5)

----------